**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | DVC .No.01/2023 |
| Deposition of Witness for | : | PW – 2 |
| Name and Age | : | திருமதி.ஜானகிதேவி (48) |
| Father / Husband Name | : | சுரேஷ் |
| Occupation | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், |
| Village | : | AWPS. Krishnagiri |
| Taluk | : | கிருஷ்ணகிரி |

**நாள்** – 16.07.2025.

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873.

**R1, R4 absent. Petition filed and allowed. R2, R3 Present.**

**ம.சா – 2**

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் அழைப்பாணை பெற்றே சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரர் மங்கம்மாள், தனது கணவர், மாமியார், மாமனார் வரதட்சனை கேட்டு கொடுமை படுத்தியதாக எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். எங்கள் காவல் நிலையத்தில் மேற்படி புகாருக்காக 24.11.2019–ம் தேதி CSR எண்.297/2019 வழங்கப்பட்டது. மேற்படி புகாரின் பேரில் விசாரணையின் போது மனுதாரர் மற்றும் 1–வது எதிர்மனுதாரர் விசாரணைக்கு ஆஜரானார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நாங்கள் வழங்கிய மேற்படி புகாருக்கான CSR No.297/2019 மற்றும் மேற்படி புகாராகும். மேற்படி புகார் மற்றும் மனுரசீது ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகாரின் மீது இரு தரப்பிலும் வரவழைத்து விசாரித்தபோது மனுதாரர் தன்னை 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வைக்குமாறு கேட்டுக்கொண்டதால் 1–ம் எதிர்மனுதாரர் பெங்களுரில் தனிகுடித்தனமாக மனுதாரருடன் வாழ இரு தரப்பினரும் சம்மதத்தித்தாலும் மேலும் தனிகுடித்தனம் வைக்க கால அவகாசம் கேட்டதால் அறிவுரை கூறி மனு ரசீது முடித்து வைக்கப்பட்டது. 23.06.2023–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரரும், சுகஸ்ரீ என்பவரும் பாதுகாப்பு வேண்டி எங்களிடம் அடைகளம் வந்தார்கள். மேற்படி இரண்டு நபர்களும் திருமணம் செய்து கொண்டதாக கூறினார்கள், சுகஸ்ரீ தனது பெற்றோரால் ஆபத்து ஏற்படும் என அடைகளம் கேட்டார். மேலும் அவரை காணவில்லை என காரிமங்கலம் காவல் நிலையத்தில் புகார் நிலுவையில் இருந்ததால் அவரை, அவரது பெற்றோரிடம் ஒப்படைத்தோம். மேற்படி விவரம் குறித்து மனுதாரருக்கு நாங்கள் தகவல் சொன்னோம். மேற்படி 2–வது திருமணம் குறித்து 1–ம் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்க கோரி வாய்மொழி புகார் கொடுத்தார். நீதிமன்றத்தில் வழக்கை நடத்தி கொள்வதாக போலிசார் அறிவுரையின் பேரில் புகார் முடிக்கப்பட்டது. இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு RTI மனு வந்தது. மேற்படி RTI மனுவிற்கு C No.2/AWPS/RTI/KGI/2023 –ன் கீழ் பதில் அளிக்கப்பட்டது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரார் கொடுத்த ம.சா.ஆ.10 பெறுத்தவரை நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி மனுவை விசாரித்த விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் மஞ்சுளா என்றால் சரிதான்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.07.16 17:52:24 +0530

மனு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.10–ல் உள்ள புகார் மனுவில் மனுதாரர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான், ஆனால் மறைந்துள்ளது. மேற்படி மனுவில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மனுவில் மனுதாருக்கும், 1–ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட திருமணத்தின் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் வரதட்சனை பணமாக எண்ணால் ரூ.1,50,000/– எனவும், எழுத்தால் ரூ.15,00,000/– எனவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுவில் 1–ம் எதிர்மனுதாரர், மனுதாரரை எங்கு, என்று எந்த நேரத்தில் கொடுமைப்படுத்தியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4–ம் எதிர்மனுதாரர்கள், மனுதாரரை என்ன காயம் ஏற்படுத்தினார்கள் எனவும், என்ன வார்த்தை பயன்படுத்தினார்கள் எனவும் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மனு சம்மந்தமாக காயச்சான்றுகள் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் மனுதாரர் 4 மாத கர்ப்பமாக உள்ளதற்கு ஏதேனும் ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் மனுதாரரை 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வைக்க கோரியே மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுவில் உண்மை தன்மை இல்லாத காரணத்தினால் தான் நான் அவர்களை சேர்ந்து வாழ அறிவுறுத்தினேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரும், சுகஸ்ரீ என்பவரும் அடைகளம் கேட்டு காவல் நிலையம் வந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. காரிமங்கலம் காவல்நிலையத்தில் நிலுவையில் இருந்த புகாரின் அடிப்படையில் சுகஸ்ரீயை அவரது பெற்றோரிடம் அனுப்பி வைத்தற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு மேற்படி விபரங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இருதரப்பினர்களுக்கு இடையே நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.07.16 17:32:59 +0530

Judicial Magistrate, Palacode